# தமிழ் மொழியில் மறுமலர்ச்சி இலக்கியத்தை உருவாக்கியவர்கள்!

வரலாற்றில் 20ஆம் நூற்றாண்டு பல விதங்களில் முக்கியமானது. ரஷ்யப் புரட்சி (1917) நடக்கிறது. சீனப் புரட்சி (1949) நடக்கிறது. மார்க்ஸும், ஏங்கல்ஸும், லெனினும், மாவோவும் உலகம் முழுவதும் கவனம் பெறுகிறார்கள். மார்க்சியம் உலக அளவில் புதிய சிந்தனைப் போக்கை உருவாக்குகிறது. அறிவொளிக்காலத் தத்துவங்கள் சமூகத்தில் அறிமுகமாகின்றன. 1921இல் தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சிக்கு வருகிறது. வரலாற்றில் புதிய மாற்றமாக விகிதாச்சார அடிப்படையிலான இடஒதுக்கீடு, கல்வி, வேலைவாய்ப்பு, பெண் கல்வி என்பதை நீதிக்கட்சி சாத்தியமாக்குகிறது. கல்வியும் வேலைவாய்ப்பும் சமூகத் தகுதியும் ஒரு பிரிவினருக்கு மட்டும்தான் என்ற நம்பிக்கையும் கருத்தாக்கமும் சட்டத்தின் மூலம் மாற்றப்படுகிறது.

சமூகச் சீர்திருத்த இயக்கமாக இருந்த தி.மு.க., அரசியல் இயக்கமாக மாறி, மக்கள் செல்வாக்கைப் பெற்று அதிகாரத்திற்கு வருவதற்கு அடிப்படையாக இருந்தது, தி.க., தி.மு.க.வைச் சார்ந்த எழுத்தாளர்களுடைய எழுத்துகள்தான். அச்சு இயந்திரத்தின் பரவலாக்கம், ஆங்கிலக் கல்வியின் பரவலாக்கம், அச்சிடப்பட்ட நூல்களை, பத்திரிகைகளை யார் வேண்டுமானாலும், எந்த இடத்திலிருந்துகொண்டும் படிக்கலாம் என்ற நிலை உருவாகிறது. சுதந்திரப் போராட்டமும் சமூகத்தில் மன எழுச்சியை உண்டாக்குகிறது. சமூகப் பற்றை உருவாக்குகிறது. சமூகத்தின் கடைநிலை மக்களின் குரலை அயோத்திதாசப் பண்டிதர், இரட்டை மலை சீனிவாசன், எம்.சி. ராஜா போன்றோர் வெளிப்படுத்துகிறார்கள். பெரியார் காங்கிரஸிலிருந்து விலகி திராவிடக் கழகத்தைத் தொடங்கி, பத்திரிகைகளை நடத்தஆரம்பிக்கிறார். பெரியாரின் பேச்சாலும், எழுத்தாலும் ஈர்க்கப்பட்டு, புதிய வாசகர்கள் உருவாகிறார்கள். எழுத்தாளர்களும் உருவாகிறார்கள். பல பத்திரிகைகளும் தொடங்கி நடத்தப்படுகின்றன.

**தி.மு.க. எழுத்தாளர்கள் எழுதுவதையும் பத்திரிகை நடத்துவதையும் ஒரு இயக்கச் செயல்பாடாகவே கருதினர். அதில் வெற்றியும் பெற்றனர். சமூகச் சூழலும் அதற்கு ஒத்திசைவாக இருந்தது. எழுத்தின் மூலம் சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்த முடியும், அரசியல் அதிகாரத்தைப் பெற முடியும், கதைகளில் எழுதிய விஷயங்களைச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்த முடியும் என்று நிரூபித்தவர்கள் உலகில் தி.மு.க. எழுத்தாளர்கள் மட்டும்தான். பேரறிஞர் அண்ணாவும் கலைஞரும் அதை சாத்தியப்படுத்தினார்கள். காலம் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்தது.**

திராவிடர் கழகத்தினர் கட்டுரைகளை மட்டுமே எழுதுகிறவர்கள். இன்றுவரை கட்டுரைகளை மட்டுமே நூலாக்கிப் போடுகிறவர்கள். திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்துவந்த தி.மு.க.வினர் தங்களுடைய கருத்துப் பிரச்சாரத்தை,கட்டுரை வடிவில் தருவதைக் காட்டிலும் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், திரைக்கதை, வசனத்தின் மூலம் தந்து சமூகத்தில் புதிய எழுச்சியை ஏற்படுத்தினர்.

மார்க்சியத்தை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு, சுதந்திரப் போராட்டத்தையும் ஏற்றுக்கொண்டு பெரியாரின் மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணடிமைதனம் ஒழிப்பு, புராண இதிகாசக் கட்டுக்கதைகளின் சமூகத் தாக்கத்தைப் புரிந்துகொண்டு, ஆண்டான் அடிமை முறை ஒழிப்பு, சமநீதி, சமூக நீதி கோட்பாட்டின் அடிப்படையில் எல்லோருக்கும் எல்லாம் என்ற தத்துவத்தை முன்னிறுத்தி, தி.மு.க. எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளின் உள்ளடக்கம், கட்டமைப்பு, மொழிப் பயன்பாடு, கருத்துப் பிரச்சாரம் எப்படி வெற்றி பெற்றது என்பதையும், சமூகத்தில்அவை ஏற்படுத்திய மாற்றத்தையும் பார்க்க வேண்டும். கல்வி, மொழி, பண்பாட்டுத் தளங்களில், இலக்கியப் படைப்புகள் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று தீர்க்கமாக உணர்ந்து எழுதியவர்கள்தான் தி.மு.க. காரர்கள்.

**தி.மு.க. எழுத்தாளர்களில் முதன்மையானவரும், மற்றவர்கள் எழுதுவதற்குப் பெரும் ஆற்றலாக இருந்தவருமான பேரறிஞர் அண்ணாவின் முதல் நெடுங்கதை 'கோமளத்தின் கோபம்'. மொத்தமாக 108 சிறுகதைகளை எழுதியிருக்கிறார். அண்ணாவின் சிறுகதைகளில் 'செவ்வாழை' அதிகம் பேசப்பட்டது. பண்ணையார் வீட்டில் வேலை செய்யும் ஒரு வேலையாளின் மகனுடைய ஆசையைப் பற்றியது. 'கருப்பண்ண சாமி யோசிக்கிறார்', 'பேய் ஓடிப்போச்சு', 'சொல்வதை எழுதேண்டா!' 'சொர்க்கத்தில் நரகம்', 'ரொட்டித் துண்டு' போன்ற கதைகள் என்றும் போற்றப்பட வேண்டியவை. இக்கதைகளில்தான் இலக்கிய அழகு கூடிவந்திருக்கிறது.**

'கருப்பண்ணசாமி யோசிக்கிறார்' கதையில் சாமி ஊர்வலத்தின்போது இரு தரப்பினருக்கிடையே மோதல் ஏற்படுகிறது. அதனால் ஊர்வலம் பாதியிலேயே நிறுத்தப்படுகிறது. சாமி சிலை நடுத்தெருவில் இறக்கிவைக்கப்படுகிறது. சாமிக்குக் காவலாக ஒரு போலீஸ்காரர் நிறுத்தப்படுகிறார். மொத்த உலகத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாக நம்பப்படுகின்ற ஈஸ்வரன் இப்போது ஒரு போலீஸ்காரரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார், பார்வதியும்தான். காவலரின் கட்டுப்பாட்டிலிருந்து ஈஸ்வரனால், பார்வதியால் வெளியேற முடியாத நிலை. கடவுள் பெரியவரா, காவலர் பெரியவரா? அதிகாரம் யாரிடம் இருக்கிறது? நகைச்சுவை உணர்வு மேலோங்கிய கதை, எத்தனை முறை படித்தாலும் அலுப்பைத் தராத, புதிய வெளிச்சத்தைத் தருகிற கதை.

'பேய் ஓடிப்போச்சு' கதையில் ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண்களை மட்டுமே பேய் பிடித்துக்கொள்கிறது. 'எதனால்?' என்ற கேள்வியை முன் வைத்து எழுதப்பட்டிருக்கிறது. 'கருப்பண்ணசாமி யோசிக்கிறார்' கதையில் இறை நம்பிக்கை என்பது எப்படி இருக்கிறது என்பதையும், 'பேய் ஓடிப்போச்சு' கதையில் மூடநம்பிக்கைகள் சமூகத்தில் எவ்வளவு ஆழமாக வேர் ஊன்றியிருக்கிறது என்பதையும் எழுதிக்காட்டியிருக்கிறார் அண்ணா. சமூகத்தில் இருக்கிற அழுக்குகளை, இழிவுகளை எல்லாம் சிறுகதைகளாக எழுதினார். சமூக எதார்த்தம் என்னவோ அதுதான் அவருடைய சிறுகதைகளின் மையம். மக்களை அறியாமையிலிருந்து விடுவிப்பது என்பதுதான் அண்ணாவின் சிறுகதைகளின் நோக்கமாக இருக்கிறது. தேவர்களின், தேவதைகளின் கதைகளை ஒருபோதும் எழுதாதவர்.







'கண்ணடக்கம்', 'அரும்பு', 'வாழமுடியாதவர்கள்', 'சங்கிலிச் சாமி', 'தப்பிவிட்டார்கள்' என்று பதினைந்து சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ள கலைஞர், மொத்தமாக 76 சிறுகதைகளை எழுதியிருக்கிறார். 'கண்ணடக்கம்'அவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பு. 'கிழவன் கனவு'(1945) கலைஞர் எழுதிய முதல் சிறுகதை. 'சங்கிலிச் சாமி', 'ஒரிஜினலில் உள்ளப்படி', 'நடுத்தெரு நாராயணி', 'குப்பைத் தொட்டி' போன்ற கதைகள் என்றென்றும் படிக்கத்தக்கவை. போலிச் சாமியார்கள் எப்படி உருவாகிறார்கள், மக்களால் ஏன் கொண்டாடப்படுகிறார்கள், ஆன்மீகம், தெய்வீகப் பக்தி என்பது ஏன் வியாபாரப் பொருளாக மாற்றப்படுகிறது என்பதைச் சொல்கிறது.

'ஒரிஜினலில் உள்ளபடி' கதை பாஞ்சாலி கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. அச்சுக் கோர்ப்பவன் ஒரு சொல்லை மாற்றி கம்போஸ் செய்வதால் ஏற்படும் விபரீதத்தைப் பற்றிய கதை. ராமநாத செட்டியார், காமநாத செட்டியாராகிவிடுகிறார். கதையைப் படிக்கும்போது யாராலும் சிரிக்காமல் இருக்க முடியாது. 'குப்பைத் தொட்டி கதை' குப்பைத் தொட்டியே பேசுவது போல் எழுதப்பட்டிருக்கிறது. குப்பைத் தொட்டி – சமூகத்தின் அனைத்து அவலங்களையும் பேசுகிறது. நல்ல உருவகக் கதை. கலைஞருடைய சிறுகதைகளில், விவரிப்புகளைக் காட்டிலும் அதிகக் கவனம் பெறுவது அவருடைய கவித்துவமான வசனங்கள்தான். தமிழ்நாட்டில் திரைக்கதை வசனங்களுக்காகக் கொண்டாடப்பட்ட ஒரே எழுத்தாளர்.



**இமையம்**
எழுத்தாளர்

**'குப்பைத் தொட்டி' கதையில் முடிந்துபோன கல்யாண பத்திரிகைகள், நீத்தார் இறுதிச் சடங்குப் பத்திரிகைகள், மஞ்சள் நீராட்டு விழா, புதுமனை புதுவிழா அழைப்பிதழ்கள் என்று பலவற்றையும் கொண்டு வந்து குப்பையாகக் கொட்டப்படுகின்றன. ஒரு பழைய புத்தகமும் குப்பையாக வந்து கிடக்கிறது. அந்தப் புத்தகத்தில் கடவுள்களின் காதல் லீலைகள், முனிவர்களின் காம லீலைகள், ஆண்டாளின் காதல் கதைவரை அச்சிடப்பட்டிருக்கிறது. பிறந்து சில மணி நேரமே ஆன குழந்தையைக் கொண்டுவந்து ஒரு பெண் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போகிறாள். சமூகத்தில் தேவையில்லை என கருதுவது எல்லாம் எங்கே போகும்? கலைஞருக்குக் கதை எழுதுவதைவிடவும், சமூகத்தை விமர்சனம் செய்வதுதான் முக்கியமானதாக இருக்கிறது. 'நடுத்தெரு நாராயணி' கதையில், 'தீபாவளி தமிழரின் திருநாளல்ல, தமிழரின் இறந்த நாளைக் கொண்டாடும் ஆரியப் பண்டிகை' என்று ஒரு வரி வரும். தமிழர் பண்பாட்டுச் சிறப்பைப் பேசுவதே கலைஞருடைய சிறுகதைகளின் முக்கிய நோக்கமாகும். 'பிரேத விசாரணை' கதை ஆலய நுழைவுப் போராட்டம் பற்றிப் பேசுகிறது.**

'உடைந்த ஆசை' **இராம. அரங்கண்ணலின்** சிறுகதைத் தொகுப்பு. 'உலகம் யாருக்கு', 'ஒரு அணா', 'கணக்குத் தீர்ந்தது', 'காதல் கீதம்', 'ஏழை'ஆகிய சிறுகதைகள் முக்கியமானவை. சமூகத்தில் சிலர் வசதி படைத்தவர்களாகவும், பெரும்பான்மையோர் பரம ஏழைகளாகவும் இருப்பது ஏன் என்ற கேள்வியை ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு விதமாக எழுப்புகிறது. ஒரு அணாகூட இல்லாத ஒரு கம்போஸரைப் பற்றிய கதைதான் 'ஒரு அணா'. வங்கிகளும் காப்பீட்டு நிறுவனங்களும் யாருக்கானவை என்பதை விளக்குகிறது 'ஏழை'. இராம அரங்கண்ணலின் சிறுகதைகள் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் அதனால் மனிதர்கள் சந்திக்கும் இழிவுகளையும் பேசுகிறது. இவருடைய கதைகள் சமூகத்தையும், அதன் நடவடிக்கைகளையும் கடுமையாக விமர்சிக்கின்றன.

**ஏ.வி.பி. ஆசைத்தம்பியின்** 'இருண்ட வாழ்வு' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள, 'இருண்ட வாழ்வு', 'மதுரை மீனாட்சி', 'லைலா மஜ்னு', 'நிரபராதி', 'தாலி', 'ராஜத்தின் திருமணம்' போன்ற கதைகள் வாசகர் கவனத்தை ஈர்க்கக் கூடியவை. 'தாலி' கதையில், தமிழ்ச் சமூக வாழ்வில் எந்தக் காலத்திலிருந்து தாலி முக்கியமானதாகக் கருதப்படுகிறது என்பதையும், அது தரும் மதிப்பு என்ன, பெண்ணுக்கு அது அடிமைச் சங்கிலியாக ஏன் மாறுகிறது என்பதையும் தெளிவாகச் சொல்கிறது. தமிழர் பண்பாட்டில் தாலி கட்டும் சடங்கு எப்போது வந்தது? பண்ணையார் வீட்டில் வேலை செய்கிற வேலைக்காரியை, படுக்கைக்கு அழைக்க, வேலைக்காரி பண்ணையாரின் கன்னத்தில் அறைந்துவிடுகிறாள். அதனால் அவளுக்குத் திருட்டுப்பட்டம் கட்டப்பட்டு ஊரைவிட்டுத் துரத்தியடிக்கப்படுகிறாள். யார் குற்றவாளி என்று கேட்கிறது 'நிரபராதி'.

**ஏ.வி.பி. ஆசைத்தம்பி,** சிறுகதைகளில் பலவிதமான புது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். சுயமரியாதைத் திருமணத்தைப் பற்றி பேசுகிறது, 'இராஜத்தின் திருமணம்' கதை. கோயிலுக்குப் போனால் நோய் குணமாகும் என்ற மூடநம்பிக்கையைப் பற்றியது 'திருசெந்தூர் முருகன் கதை'. நோயாளிகள் மருத்துவமனைக்குப் போவார்களா, நோய் தீர கோயிலுக்குப் போவார்களா? என்றும் பொருந்தக்கூடிய கதை.

'சஞ்சீவி சாலை', 'அதிர்ச்சி', 'அவள் குழந்தை', 'நச்சுப் பொய்கை' போன்ற சிறந்த கதைகளை எழுதியவர் **இளமைப் பித்தன்**. 'சஞ்சிவி சாலை'. தரமான எழுத்தாளர்களுக்குக் கிடைக்காத பணம், கௌரவம் எப்படித் தரமற்ற எழுத்தாளர்களுக்குக் கிடைக்கிறது என்ற கேள்வியை வாசகர் முன் வைக்கிறது. இன்றும் பொருந்தக்கூடிய கதை. ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியை வகுத்துள்ள சமூகக் கட்டமைப்பை விமர்சிக்கிறது 'நச்சுப் பொய்கை'. 'அவதாரம்' கௌதம புத்தரைப் பற்றியது. மக்களை அறியாமையிலிருந்து விடுவிக்க விரும்பிய புத்தனை மக்கள் மதத் தலைவராக ஏன், எதனால் மாற்றினார்கள்? புத்தர் தோற்றுப்போன இடத்தைச் சுட்டிக்காட்டுகிறது. நேர்த்தியாக எழுதப்பட்ட கதை. 'சொர்க்க லோகம்', 'நரக லோகம்', 'தேவ லோகம்' என்று யாராவது சொன்னால், அவை எங்கே இருக்கின்றன, எத்தனை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது என்று கேட்கிற தி.மு.க. எழுத்தாளர்களின் வரிசையில் இளமைப் பித்தனும் ஒருவராக இருக்கிறார்.

**இரா.இளஞ்சேரன்** எழுதியுள்ள 'இறைவனும் நானே', 'வண்ணப் புறாக்கள்', 'கோணல்', 'பவானி தங்கம்', 'சம்பந்தர் செத்த கதை' போன்ற கதைகளைப் படிக்கும்போது, எழுத்தாளரின் மீது மதிப்புக் கூடுகிறது. 'சம்பந்தர் செத்த கதை' நம் நாட்டில் மதங்களுக்குள் ஏற்பட்ட போட்டி, அதனால் ஏற்பட்ட கொலைகள், சைவம் சிறந்ததா, வைணவம் சிறந்ததா என்ற கேள்வியை எழுப்பி மனிதமே சிறந்தது என்று கூறுகிறார் இளஞ்சேரன். மதம் மனிதர்களைப் பக்குவப்படுத்துவதற்குப் பதிலாக வெறியர்களாக, காட்டுமிராண்டிகளாக மாற்றுகிறது. இன்று உலகில் நடக்கும் அனைத்துக் கலவரங்களுக்கும் மதமே காரணமாக இருக்கிறது. 'பவானி தங்கம்' கதை நம்பூதிரிகளின் மேலாதிக்கம் பற்றியும் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் மேலாதிக்கம் பற்றியும் பேசுகிறது. சுதந்திர மனமும், சிந்தனையும் கொண்ட ஒரு மனிதன் என்ன முடிவெடுப்பான் என்ற கேள்வியோடு முடிகிறது கதை. இளஞ்சேரனின் கதைகளில் சமூகத்துக்கெதிரான கோபம் வெளிப்படையாகவே தெரிகிறது. இறுக்கமான சாதி, சமய, சடங்குகளுக்கு எதிரான குரலை வலுவாக எழுப்புகிறது இளஞ்சேரனின் சிறுகதைகள்.

'அந்தப் புன்னகை', 'சிவந்த கன்னம்', 'இரு கைதிகளின் கதை', 'குந்தமன் துறவு', 'பேசா மடந்தை', 'நன்றி கெட்டவர்கள்' போன்ற அற்புதமான சிறுகதைகளை எழுதியவர் **கே.ஜி.இராதா மணாளன்.** 'குந்தமன் துறவு' கௌதம புத்தரின் துறவு வாழ்க்கையைப் பேசுகிறது. புத்தனைப் பெரிய பொக்கிஷமாகக் கருதிய அதே மக்கள் காலப்போக்கில் எதனால் அவரை மறந்துபோனார்கள்? கே. ஜி. இராதா மணாளன் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பதற்கு இந்த ஒரு கதையே போதும். கதையை எழுதிய பாங்கும், மொழியைப் பயன்படுத்திய விதமும் ஆச்சரியப்பட வைக்கிறது. 'பேசா மடந்தை' கதை நம்முடைய நாட்டிலிருக்கும் பெண்களுடைய அவல வாழ்வைப் பற்றி பேசுகிறது. சாதியும் மதமும் பெண்களை எந்தெந்த வகையில் வஞ்சிக்கிறது என்பதை எழுதியிருக்கிறார்.

'குந்தமன் துறவு' கதையில் தத்துவமாகப் பேசிய எழுத்தாளர் 'பேசா மடந்தை' கதையில், பெண்ணிய அரசியலை, உரிமையை, சுயமரியாதையைப் பற்றிப் பேசுகிறார். 'அந்தப் புன்னகை' கதையில் திப்பு சுல்தானின் அரண்மனையில் ஒரு பெண் கொல்லப்படுகிறாள். அரண்மனை என்றாலே சூதும் நயவஞ்சகமும், பொறாமையும், அதிகாரத்திற்கான வேட்கையும் நிறைந்த இடம் தானே. 'இரண்டு கைதிகளின் கதை'யும் முக்கியமான ஒன்றுதான். இரண்டு திருடர்களின் உறவு எப்படிப் போய் முடியும் என்பதை சொல்கிறது. நல்லவனுக்கு நல்லவனுடைய நட்பு. திருடனுக்குத் திருடனுடைய நட்பு. கதையின் முடிவும் இதுதான். எதையுமே புனிதப்படுத்தாத எழுத்து.

**பாரதிதாசன், அண்ணா, கலைஞரைத் தொடர்ந்து சாகித்ய அகாடெமியால் 'இந்திய இலக்கிய சிற்பிகள்' வரிசையில் நூல் வெளியிடப்பட்ட எழுத்தாளர்தான் டி.கே. சீனிவாசன்.** 'ஊர்ந்தது உயர்ந்தால்', 'மலர்ச்சியும் வளர்ச்சியும்' ஆகிய நெடுங்கதைகளையும், 'உலக அரங்கில்', 'கடவுளால் ஆகாதது', 'குறள் கொடுத்த குரல்', 'எல்லைக்கு அப்பால்', 'கொள்கையும் ஓட்டமும்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டவர். 'காவி உடையும், தாடி மயிரும் மக்களுக்குத் தருவதென்ன?', 'வேதம் மட்டுமே கல்வி அல்ல. அதற்கும் அப்பால் இருக்கிறது அறிவு', 'தினம்தினம் கோடிக்கணக்கில் மக்கள் காண வந்தும் காட்சி கொடுக்காத கடவுள் எதற்கு?' என்ற வரிகள் எல்லைக்கு அப்பால் கதையில் வருகிறது. கோவிலை மையப்படுத்தியும் கடவுளை மையப்படுத்தியும் நடக்கிற அக்கிரமங்களைப் பற்றியும், மடமையிலிருந்து, மூடநம்பிக்கையிலிருந்து அறிவியல் சிந்தனைக்குக் கதாநாயகன் சந்திரன் எப்படி வருகிறான் என்பதைப் பற்றியும் கதை விளக்குகிறது.

**'கடவுளால் ஆகாதது' கதையில், பெரியார் ஒரு கதாபாத்திரமாக வருகிறார். தமிழ்நாட்டு நவீனத் தமிழ் எழுத்தாளர்கள், அரசியல் கட்சித் தலைவர்களை, சமூகப் போராளிகளைக் கதாபாத்திரங்களாக மாற்றுவதில்லை. அப்படி எழுதினால் தங்களுடைய கதைக்கு இலக்கியத் தகுதி கிடைக்காது என்று நம்புகிறார்கள். இதுவும் ஒரு மூடநம்பிக்கைதான். எழுத்தாளர்களுக்கே மூடநம்பிக்கை இருந்தால் என்ன செய்வது? தி.மு.க., தி.க. எழுத்தாளர்கள் மூடநம்பிக்கைகள், சமய, சடங்குகளிலும் நம்பிக்கையற்றவர்கள். 'பக்தி' கதையில், 'வேத, சாஸ்திர, புராணங்கள் கவிராயரின் கை ஆயுதங்களாயின. விடுதலை, திராவிட நாடு, போர்வாள், கொஞ்சம் சொந்த புத்தி இவைதான் தங்கப்பனுக்குக் கிடைத்த ஆயுதங்களும் அஸ்திரங்களும்' என்று எழுதியிருக்கிறார்.**

**இந்த வரிகளிலிருந்து டி. கே. சீனிவாசனின் சிறுகதைகளின் தன்மை என்ன என்பதை அறிந்துகொள்ள முடியும். இப்படி எழுதுவதற்கும் ஒரு துணிச்சல் வேண்டும். 'குறள் கொடுத்த குரல்' கதை திருக்குறளின் மேன்மையைக் கதையாகவும் விவாதமாகவும் வாழ்வியலாகவும் பேசுகிறது. தன்னுடைய அரசியல் கொள்கையை ஒளிவுமறைவின்றி சிறுகதைகளாக எழுதியிருக்கிறார் டி. கே. சீனிவாசன். அடுத்த ஜென்மம், மறுஜென்மம், ஏழேழு பிறவிகள், சடங்குகள், சம்பிரதாயங்களின் மீதுள்ள நம்பிக்கைகளுக்கு எதிராக எழுதிய தி.மு.க. எழுத்தாளர்களில் ஒருவராக இருக்கிறார் டி.கே. சீனிவாசன்.**

**தில்லை மறைமுதல்வனின்** 'நீறுபூத்த நெருப்பு', 'வெற்றியிலும் தோல்வி பெரிது', 'காலை நிலவு', 'பொறியில் சிக்கிய எலிகள்' போன்ற கதைகள் வாசகர் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். 'வெற்றியிலும் தோல்வி பெரிது' கதை ஒன்றுக்காகவே தில்லை மறைமுதல்வன் போற்றப்படுவார். இராவணனைக் கொன்ற பிறகு சீதையிடம் வருகிறான் ராமன். அசோக வனத்தில் நடைபெறுகிறது இருவருக்குமான உரையாடல்:

"இந்த இலங்கைப் படையெடுப்பு உன்னை மீட்பதற்காக அல்ல. எனக்காக, என் பெயருக்கு வந்த மாசைத் துடைப்பதற்காக" என்று ராமன் சொன்னதும் சீதை நிலைகுலைந்து போகிறாள். 'தீயில் இறங்கி நிரூபிக்க வேண்டும்' என்று கட்டாயப்படுத்தியபோதும், மீண்டும் வனத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறியபோதும் – ராமன் சொன்னதை ஏற்றுத்தான் நடக்கிறாள். சீதை காவிய நாயகியாக உருவாக்கப்பட்டவள். அவளுடைய வார்த்தைகள் மட்டுமல்ல, அவளுடைய நடவடிக்கைகளும் வரையறுக்கப்பட்டதுதான். ராஜ வாழ்க்கையும் அரண்மனை வாழ்க்கையும் கதை, காவியங்களில்கூட வரையறுக்கப்பட்டதுதான். அதே நேரத்தில் ராமனிடம் சீதை, "இராவணனிடம் பெற்ற வெற்றியைவிட இப்போது நீங்கள் பெற்ற தோல்வி மகத்தானது" என்று சொல்கிறாள். கதையில் இந்த உரையாடல் இயல்பாக இருக்கிறது. நடத்தையில் இராவணன் மகத்தானவனா, ராமன் மகத்தானவனா என்ற கேள்வி எழுகிறது. யார் மேம்பட்டவன் என்பதை வாசகர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்.

தில்லை மறைமுதல்வனுடைய ஒவ்வொரு கதையும் படித்து ரசிப்பதற்கு ஏற்றது என்பதைவிடவும் கற்பதற்கு ஏற்றது. 'பொறியில் சிக்கிய எலிகள்'ஏழைப் பெண்களின் வாழ்க்கை நெருக்கடியைப் பேசும் கதை. காலம்தோறும் ஏழைப் பெண்கள் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதிலும் சமூகத்தால் நடத்தை கெட்டவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களுடைய நிலை என்ன?

**சிறுகதை மன்னன் என்று போற்றப்பட்டவர் எஸ். எஸ். தென்னரசு.**

**அவர் எழுதிய சிறுகதைகளில், 'முத்தாயி', 'விவாக ரத்து', 'வெள்ளையன் கட்டிய மறவன் கோயில்', 'பூனை தொங்கிய புளிய மரம்' போன்ற பல கதைகள் கவனத்தை ஈர்ப்பவை. ஒரு பெண், அதிலும் அழகாக இருக்கக்கூடிய பெண் – சமூகத்தில் சந்திக்கக்கூடிய இடர்பாடுகள் எவ்வளவு? முத்தாயி துணிச்சல் மிக்கவளாகவும் நேர்மையான குணம் கொண்டவளாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். இந்தப் பண்பு தமிழ்ப் பெண்களுக்கே உரியது என்று தென்னரசு சொல்கிறார். வைதீக முறையைக் கிண்டலடிப்பதில் வல்லவராக இருக்கிறார். "ஆடவர் கொண்டை போட்டிருப்பார்கள். அது வைதீகக் கொண்டை அல்ல" என்று முத்தாயி கதையில் வருகிறது. 'பூனை தொங்கிய புளியமரம்' கதையில் கிராமப்புறங்களில் 'பேய்' பற்றிய கதைகள்மக்கள் மனதில் எவ்வளவு இருக்கின்றன என்பதைச் சொல்கிறது. 'விவாகரத்து' கதை தமிழ்நாட்டில் அறுத்துக்கட்டும் முறையைப் பற்றி பேசுகிறது. 'குயிலின் குரல்' ஒரு எழுத்தாளனைப் பற்றியது. பொதுச் சமூகத்தில் விற்பனையாகக்கூடிய எழுத்தாளர்கள் யார், விற்பனையாகாத எழுத்தாளர்கள் யார்? சமூக அக்கறையோடு எழுதுகிற எழுத்தாளர்களை ஏன் மக்கள் காலந்தோறும் புறக்கணிக்கிறார்கள்? புதிரான கேள்விகள்தான். ஆபாச எழுத்தாளர்கள், சமூக அக்கறையற்ற எழுத்தாளர்கள்தான் கொண்டாடப்படுகிறார்கள். முன்பு மட்டுமல்ல, இன்றும் இதுதான் சமூக எதார்த்தம். பிறப்பால் அவமானப்படுத்தப்பட்டவர்களை, ஒதுக்கிவைக்கப்பட்டவர்களை இலக்கிய வரலாற்றில் முதன்முதலாகக் கதாபாத்திரங்களாக வைத்துக் கதை எழுதியவர்கள் தி.மு.க. எழுத்தாளர்கள்தான். அதில் எஸ்.எஸ். தென்னரசுக்கும் பங்கு இருக்கிறது.**

தொடர்ச்சி நாளை...